(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

# தேசிய வெளிக்கள நிலையம் தொண்டைமானாறு

## இரண்டாம் தவணைப் பரீட்சை - 2023

# National Field Work Centre, Thondaimanaru.

## 2nd Term Examination - 2023

NFWC

| | | |
|---|---|---|
| பொருளியல் Economics | Three Hours / Gr : 12 (2024) | 21 T I,II |

### பகுதி – I

❖ **பகுதி I இல் கட்டாயமான இருபது வினாக்கள் உண்டு. அவை ஒவ்வொன்றுக்கும் கீழே ஐந்து விடைகள் வீதம் வழங்கப்பட்டுள்ளன. அதில் ஒன்று மட்டுமே சரியானது. அவ் விடையினைத் தெரிவு செய்து அவ்விடை இலக்கத்தினை புள்ளடித்தாளில் அடையாளமிடுக.**

01) கீழே தரப்பட்ட கூற்றுக்களில் உறுதியான கூற்றை தெரிவு செய்க
1. தொழிலாளர்களின் ஆகக் குறைந்த சம்பளம் மாதாந்தம் ரூபா 50000 ஆக இருக்க வேண்டும்.
2. சுற்றுலாத்துறையையும் மீன்பிடித்தொழிலையும் அபிவிருத்தி செய்வதன் மூலம் இலங்கையின் அந்நியச்செலாவணிப் பிரச்சினையை தீர்க்க முடியும்.
3. பாடசாலை மாணவர்களுக்கு வருடத்திற்கு இரண்டு பாடநூல் பொதிகளை வழங்குதல் வேண்டும்.
4. வெளிநாடுகளில் கடன் பெற்று முதலீடு செய்வதைவிட சர்வதேச நாணய நிதியத்திடம் உதவி பெறுவதே சிறந்ததாகும்.
5. இலங்கை அரசு கடந்த காலங்களில் பல தடவைகள் சர்வதேச நாணயநிதியத்திடம் உதவி பெற்றபோதும் இன்றும் அந்நியச்செலாவணிப்பற்றாக்குறை பிரச்சினையை எதிர்நோக்குகின்றது.

02) கீழே தரப்பட்ட கூற்றுக்களில் எது பொருளாதாரத்தின் பங்களிப்பினைச் சிறப்பாக விபரிக்கின்றது?
1. இழிவளவான செலவில் பொருட்கள் சேவைகளை உற்பத்திசெய்வது.
2. நாட்டின் தேசிய வருமானத்தை உயர் நிலையில் பேணுவது.
3. பொருளாதரப் பின்னடைவிற்கு எதிராக தீர்மானங்களை மேற்கொள்வது.
4. சமூகத்தின் மனிததேவைகளைத் திருப்திப்படுத்தும் நோக்குடன் பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்து வழங்குவது.
5. பணவீக்கத்தைக் கட்டுப்படுத்தி பொதுவிலைமட்டத்தை உறுதியாகப் பேணுவது.

03) அருமைத்தன்மைப் பிரச்சினையானது
1. வளர்முக நாடுகளில் மட்டும் காணப்படும்.
2. வறிய நாடுகளில் மட்டும் காணப்படும்.
3. உலகிலுள்ள அனைத்து நாடுகளிலும் காணப்படும்.
4. கீழைத்தேச நாடுகளில் மட்டும் காணப்படும்.
5. கலப்புப் பொருளாதர நாடுகளில் மட்டும் காணப்படும்.

04) இலவசப்பண்டம் தொர்பான பின்வரும் கூற்றுக்களில் மிகவும் சரியானது
1. பூச்சிய விலையில் கிடைக்கும் பண்டங்களாகும்.
2. அருமைத்தன்மையைக் கொண்ட பண்டங்களாகும்.
3. கிடைப்பனவில் வளப்பயன்பாடுகள் அற்ற பண்டங்களாகும்.
4. கிடைப்பனவில் அமையச்செலவினை ஏற்கும் பண்டங்களாகும்.
5. மனித தலையீட்டுடன் ஏராளமாகக் கிடைக்கும் பண்டங்களாகும்.

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

05) பின்வரும் கூற்றுக்களில் அமையச்செலவினை விபரிக்கும் மிகச்சரியான கூற்று
1. ஒன்றைப் பெறுவதற்காக இன்னொன்றை இழப்பதாகும்.
2. ஒன்றைப் பெறுவதற்காக ஒன்றுக்கு மேற்பட்ட பல பயன்பாடுகளை இழப்பதாகும்.
3. வளங்களுக்கு இருக்கும் அனைத்துப்பயன்பாடுகளையும் அடைய முடியாமல் இழப்பதாகும்.
4. மாற்றுபயோகங்களில் பெற்றுக் கொள்கின்ற ஒரு உபயோகத்தின் மெய்ப்பெறுமதிக்காக இழக்கப்படும் மற்றய உபயோகத்தின் மெய்ப் பெறுமதியாகும்.
5. மாற்றுபயோகங்களில் பெற்றுக் கொள்கின்ற ஒரு உபயோகத்தின் மெய்ப்பெறுமதிக்காக இழக்கப்படும் அதற்கு அடுத்த சிறந்த உபயோகத்தின் மெய்ப் பெறுமதியாகும்.

06) பின்வருவனவற்றில் சந்தைப்பொருளாதாரத்தின் பண்புகளில் ஒன்று
1. அரச பங்களிப்பு மிகக்கூடுதலாக இருக்கும்.
2. பொருளாதரப் பிரச்சினைகளை தீர்ப்பதில் அரசு சமூக வழக்காறுகளில் அதிக கவனம் செலுத்தும்.
3. உற்பத்திச் சாதனங்கள் சொத்துக்கள் அரசுடைமையாக இருக்கும்.
4. தனியார் சொத்துடைமையும் மையப்படுத்தப்பட்ட தீர்மானம் மேற்கொள்ளலும் காணப்படும்.
5. தனியார் சொத்துடைமையும் பன்முகத் தீர்மானம் மேற்கொள்ளலும் காணப்படும்.

07) உற்பத்திச்சாத்திய வளையியின் மீதுள்ள புள்ளி ஒன்றில் இருந்து உற்பத்திச்சாத்திய வளையிக்கு உட்புறமுள்ள புள்ளி ஒன்றை நோக்கிய நகர்வு பின்வருவனவற்றில் எதனைக் காட்டாது?
1. வேலையின்மையின் தோற்றம்
2. வேலைவாய்ப்பின் வீழ்ச்சி
3. உற்பத்தி வீழ்ச்சி
4. பொருளாதாரப்பின்னடைவு
5. உற்பத்தி இயலளவு வீழ்ச்சி

08) உற்பத்திச் சாத்திய வளைகோடு நேர்கோடானதாக அமையும் போது
1. இரு உற்பத்தியிலும் வளங்கள் ஓரினத்தன்மை வாய்ந்தவையாக இருக்கும்.
2. இரு உற்பத்தியிலும் கையாளப்படும் தொழிநுடபத்தில் வேறுபாடு நிலவும்.
3. இரு உற்பத்தியிலும் கையாளப்படும் வளங்களின் வினைதிறனில் வேறுபாடு காணப்படும்.
4. இரு உற்பத்தியிலும் கையாளப்படும் வளங்கள் பூரண பதிலீட்டுத் தன்மை வாய்ந்தனவாகக் காணப்படாது.
5. அதிகரிக்கும் அமையச்செலவு காணப்படும்.

09) பின்வருவனவற்றில் இயற்கை வளத்திற்கு உதாரணமாகக் கருதப்படாதது
1. பாசிக்குடா கடற்கரை
2. மாகம்ப துறைமுகம்
3. துன்கிந்த நீர்வீழ்ச்சி
4. சிங்கராஜ வனம்
5. திருகோணமலை துறைமுகம்

10) ஒரு சாதாரண பண்டத்தின் கேள்வி வளைகோட்டின் வழியே புள்ளி கீழ் நோக்கி அசையும் போது பின்வருவனவற்றில் எது நிகழாது?
1. விலை குறைதல்
2. மெய் வருமானம் குறைதல்
3. கேள்வித்தொகை கூடுதல்
4. சார்பு விலை குறைதல்
5. கேள்வி நீட்டம்

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

11) ஒரு பண்டத்தின் நிரம்பல் வளைகோடு இடப்புறம் நகர காரணமாக அமையக்கூடியது?
1. பிரதியீட்டுப் பண்டங்களின் சார்பு இலாபங்களில் ஏற்படும் அதிகரிப்பு
2. காலநிலையில் ஏற்படும் பாதகமான மாற்றம்
3. அரசு அறவிடும் உற்பத்தி வரிகளை அகற்றுதல்
4. உற்பத்தியில் நவீன தொழிநுடபங்களை புகுத்துதல்
5. அரசு உற்பத்தியாளர்களுக்கு மானியங்களை வழங்குதல்

12) பின்வருவனவற்றில் சரியான கூற்றை தெரிவு செய்க.
1. இழிவுப்பண்டஙகளில் விலை குறையும் போது வருமான விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவை விட பதிலீட்டு விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவு குறைவாக இருக்கும்.
2. கிபன் பண்டங்களின் விலை அதிகரிக்கும் போது வருமான விளைவினால் கேள்வித்தொகை அதிகரிக்கும் அளவை விட பதிலீட்டு விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவு கூடுதலாக இருக்கும்.
3. சாதாரண தரப் பண்டங்களில் விலை அதிகரிக்கும் போது வருமான விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவும் பதிலீட்டு விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவும் சமனாக இருக்கும்.
4. இழிவுப் பண்டங்களில் விலை அதிகரிக்கும் போது வருமான விளைவினால் கேள்வித்தொகை அதிகரிக்கும் அளவை விட பதிலீட்டு விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவு கூடுதலாக இருக்கும்.
5. கிபன் பண்டங்களின் விலை குறையும் போது வருமான விளைவினால் கேள்வித்தொகை குறையும் அளவை விட பதிலீட்டு விளைவினால் கேள்வித்தொகை அதிகரிக்கும் அளவு கூடுதலாக இருக்கும்.

13) ஒரு நுகர்வோனின் மாதாந்த வருமானம் ரூபா 50000 இல் இருந்து ரூபா 60000 ஆக அதிகரிக்கும் போது குறித்த ஒரு பண்டத்தின் கேள்வியின் கணியம் 700 அலகுகளிலிருந்து 800 அலகுகளாக அதிகரித்தது. இவ்வருமான வீச்சுக்களில் வருமானம் சார்கேள்வி நெகிழ்ச்சியின் அளவு

1. 0.63 2. 0.71 3. -0.71 4. 0.73 5. -0.73

14) ஒரு சாதாரண பண்டத்தின் கேள்வி, நிரம்பல் என்பவற்றில் ஏற்பட்ட மாற்றங்களினால் சமநிலை விலை அதிகரித்த அதே வேளை சமநிலைத் தொகை மாற்றம் நிச்சயமற்றதாகக் காணப்பட்டது. இதற்கான காரணம்
1. அரசின் உற்பத்தி மானியங்கள் அகற்றப்பட்டமையும் நுகர்வோரின் வருமான வீழ்ச்சியும்
2. அரசின் உற்பத்தி மீதான வரிவிதிப்பும் பிரதியீட்டுப் பொருட்களின் விலை வீழ்ச்சியும்
3. தொழிலாளர்களின் நாளாந்தக் கூலி மட்டங்களில் ஏற்பட்ட கணிசமான அதிகரிப்பு
4. உற்பத்திச் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பும் இணைப்புப் பண்டங்களின் விலை அதிகரிப்பும்
5. உள்ளீட்டுப் பொருட்களின் விலை அதிகரிப்பும் உற்பத்திக் காரணிகளின் விலை அதிகரிப்பும்

15) குறித்த ஒரு பண்டத்தின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு உள்ளன.

$Qd=30-P$ $Qs=-12+2P$

இப்பண்டத்தின் சமநிலை விலை சமநிலைத் தொகை என்பவற்றை சரியாகக் காட்டுவது

| சமநிலை விலை | சமநிலைத் தொகை |
|---|---|
| 1. ரூபா 14 | 16 அலகுகள் |
| 2. ரூபா 16 | 14 அலகுகள் |
| 3. ரூபா 14 | 14 அலகுகள் |
| 4. ரூபா 16 | 16 அலகுகள் |
| 5. ரூபா 21 | 9 அலகுகள் |

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

16) நெகிழ்வற்ற கேள்வியையும் நெகிழ்வுள்ள நிரம்பலையும் கொண்ட பண்டத்தின் மீது அரசினால் விதிக்கப்படும் அலகு வரியானது

1. நுகர்வோர் மீது குறைந்த வரிச்சுமையை ஏற்படுத்தும்
2. நுகர்வோர் மீது கூடியளவு வரிச்சுமையை ஏற்படுத்தும்
3. வரிச்சுமை முழவதையும் நுகர்வோர் சுமக்க நேரிடும்
4. வரியின் பெருஞ்சுமையை உற்பத்தியாளர் சுமக்க நேரிடும்
5. வரிச்சுமையை நுகர்வோரும் உற்பத்தியாளரும் சமமாக சுமக்க நேரிடும்

17) போட்டிச்சந்தை ஒன்றில் விற்பனை செய்யப்படும் பண்டமொன்றின் கேள்விநிரம்பல் சமன்பாடுகள் வருமாறு

Qd=200-5P Qs=-10+2P

இப்பண்டம் ரூபா 25 விலையில் இறக்குமதிக்குத் திறந்து விடப்படுமாயின் உள்நாட்டு நிரம்பலையும் இறக்குமதி நிரம்பலையும் சரியாகக் காட்டுவது

| | உள்நாட்டு நிரம்பல் | இறக்குமதி நிரம்பல் |
|---|---|---|
| 1. | 40 அலகுகள் | 35 அலகுகள் |
| 2. | 150 அலகுகள் | 200 அலகுகள் |
| 3. | 40 அலகுகள் | 110 அலகுகள் |
| 4. | 110 அலகுகள் | 40 அலகுகள் |
| 5. | 200 அலகுகள் | -10 அலகுகள் |

18) போட்டிச்சந்தை ஒன்றில் விற்பனை செய்யப்படும் பண்டமொன்றுக்கு அரசாங்கம் செயற்திறன் வாய்ந்த இழிவு விலையினை நிர்ணயிக்கும் போது,

1. நுகர்வோன் மிகை அதிகரிக்கும்
2. உற்பத்தியாளன் மிகை அதிகரிக்கும்
3. மொத்தப் பொருளாதார மிகை அதிகரிக்கும்
4. மிகை நிரம்பல் ஏற்படும்
5. மிகைக்கேள்வி ஏற்படும்

19) குறைந்து செல்லும் எல்லை விளைவு விதி தொழிற்படும் போது

1. சராசரி உற்பத்தி எல்லை உற்பத்தி ஆகிய இரண்டும் அதிகரிக்கும்
2. எல்லை உற்பத்தி சராசரி உற்பத்தி ஆகிய இலண்டும் குறையும்
3. மொத்த உற்பத்தி வீழ்ச்சி அடைய எல்லை உற்பத்தி அதிகரிக்கும்.
4. மொத்த உற்பத்தி சராசரி உற்பத்தி ஆகிய இரண்டும் வீழ்ச்சியடையும்
5. சராசரி மாறும் செலவு எல்லைச செலவு ஆகிய இரண்டும் வீழ்ச்சியடையும்

20) பின்வரும் சந்தைகளில் எச்சந்தையில் போட்டி கூடுதலாக இருக்கும்?

1. மரக்கறிச் சந்தை
2. மின்சார சேவைச் சந்தை
3. எரிவாயு உற்பத்திச் சந்தை
4. புகையிரத போக்குவரத்துச் சந்தை
5. சிகரெட்டுச் சந்தை

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

## பகுதி - II

❖ **'அ' பகுதியிலிருந்து இரு வினாக்களையும் 'ஆ' பகுதியிலிருந்து இரு வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக நான்கு வினாக்களுக்கு விடை தருக.**

### 'அ' பகுதி

***01)***

1. பொருளியலில் அருமை என்ற எண்ணக் கருவினால் கருதப்படுவது யாது? அருமை காணப்படுவது தெரிவுப் பிரச்சினையை ஏன் தவிர்க்க முடியாததாக்குகிறது? *(04 புள்ளிகள்)*

2. பொருளியலில் ஊழியம் என்ற உற்பத்திக்காரணியை வரையறை செய்து அவற்றின் முக்கிய பண்புகள் நான்கினைத் தருக. *(04 புள்ளிகள்)*

3. சந்தைப் பொருளாதாரத்திற்கும் கட்டளைப் பொருளாதாரத்திற்கும் இடையான பிரதான வேறுபாடுகள் 4 தருக. *(04 புள்ளிகள்)*

4. பின்வருவனவற்றைக் காட்டுவதற்கான உற்பத்தி இயல்தகவு வளையிகளை வரைக.
   i. உள்நாட்டுக் குழப்பங்களால் மூலதனச் சொத்துக்களைக்கொண்ட ஒருகையிருப்பு அழிவுக்குள்ளாகியது. *(02 புள்ளிகள்)*
   ii. கொவிட்-19 நோய்த்தொற்றினால் வளப்பயன்பாடு குறைவடைய ஒப்பீட்டளவில் விவசாய உற்பத்திகளைக் காட்டிலும் கைத்தொழில் உற்பத்திகள் குறைவடையும் விகிதம் உயர்வாகக் காணப்பட்டது. *(02 புள்ளிகள்)*

5. அரிசி உற்பத்தியைக் கிடை அச்சிலும் புடைவை உற்பத்தியை நிலைக்குத்து அச்சிலும் காட்டும் வகையில் அதிகரித்துச் செல்லும் அமையச் செலவை பிரதிபலிக்கும் ஓர் உற்பத்திச்சாத்திய வளையியை வரைக.நீர் வரைந்த வரிப்படத்தில் பின்வரும் புள்ளிகளை குறித்துக் காட்டுக.
   i. பொருளாதாரம் வேலையின்மையில் இருக்கும் A புள்ளி
   ii. சாதனங்கள் அனைத்தும் உத்தம பயன்பாட்டில் இருக்கும் B புள்ளி
   iii. பொருளாதாரத்தின் அருமையை விளக்கும் C புள்ளி
   iv. சாதனங்கள் அனைத்தும் உத்தம பயன்பாட்டில் அரிசி உற்பத்தியில் கையாளப்படும் D புள்ளி
   v. வளங்கள் பூரணமற்றுப் புடைவை உற்பத்தியில் கையாளப்படும் E புள்ளி
   vi. சாதனங்கள் எவையும் உற்பத்திக்குக் கையாளப்படாமல் விடப்படும் F புள்ளி

   *(04 புள்ளிகள்)*

***02)***

1. வருமான விளைவு பதிலீட்டு விளைவு என்பவற்றை கையாண்டு கேள்வி விதியினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

2. கேள்வி விதிக்கு முரணான விதத்தில் கேள்வி செயற்படும் சந்தர்ப்பங்கள் இரண்டினைக் குறிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

3. மீனினது நிரம்பல் வளைகோட்டை இடப்புறம் நகர்த்தும் காரணிகளை குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. குறித்த ஒரு பண்டத்தின் கேள்வி, நிரம்பல் சமன்பாடுகள் பின்வருமாறு தரப்படடுள்ளன.

**கேள்விச்சமன்பாடு Qd=250-10P**

**நிரம்பல் சமன்பாடு Qs=40+5P**

i. இப்பண்டத்தின் சந்தைச் சமநிலை விலையினையும் சமநிலைத் தொகையினையும் மதிப்பிடுக. *(02 புள்ளிகள்)*

ii. சமநிலை விலையில் விலைசார் கேள்வி நெகிழ்ச்சியினையும் விலைசார் நிரம்பல் நெகிழ்ச்சியினையும் மதிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

iii. சந்தைச் சமநிலைப் பொருட்தொகைக்கான நுகர்வோன் மிகை, உற்பத்தியாளன் மிகை, மொத்தப் பொருளாதார மிகை ஆகியவற்றை மதிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

iv. இப்பண்டத்திற்கு எவ் விலையில் கேள்வியின் புள்ளி நெகிழ்ச்சி ஒன்றுக்கு சமனாக இருக்கும். *(02 புள்ளிகள்)*

***03)***

1. விலை சார் கேள்வி நெகிழ்ச்சியை நிர்ணயிக்கும் காரணிகள் 4 தருக. *(04 புள்ளிகள்)*

2. X,Y பண்டங்கள் பற்றிய தரவுகள் சில வருமாறு

| | X பண்டம் | Y பண்டம் |
|---|---|---|
| விலைசார் கேள்வி நெகிழ்ச்சி | -2.5 | -0.8 |
| வருமானம் சார் கேள்வி நெகிழ்ச்சி | -0.5 | 2.0 |

இவ்விரு பண்டங்களுக்கருமிடையான குறுக்கு கேள்வி நெகிழ்ச்சி 1.8 இத்தரவுகளின் அடிப்படையில் X,Y பண்டங்கள் பற்றி உம்மால் யாது கூற முடியும்? *(05 புள்ளிகள்)*

3. உயர்ந்தபட்ச கேள்வியின் விலை குறைந்தபட்ச நிரம்பலின் விலை என்ற இரு எண்ணக்கருக்களையும் வரைபடங்களைக் கையாண்டு விளக்குக. *(04 புள்ளிகள்)*

4. நுகர்வோன் மிகை பூச்சியமாகத் தேவையான நிபந்தனையை வரைபடம் ஒன்றை கையாண்டு விளக்குக. *(04 புள்ளிகள்)*

5. நெல் உற்பத்திக்கு அரசு வழங்கிய மானியத்தை நிறுத்தியமையால் நெல்லின் சந்தைச் சமநிலையில் ஏற்படும் மாற்றத்தினை வரைபடம் மூலம் விளக்குக. *(03 புள்ளிகள்)*

## ‘ஆ’ பகுதி

**04)** போட்டிச்சந்தை ஒன்றில் விற்பனை செய்யப்படும் பண்டம் ஒன்றின் கேள்வி நிரம்பல் பற்றிய தரவுகள் பின்வருமாறு தரப்படுகின்றன.

| விலை(ரூபா) | கேள்வித்தொகை(அலகு) | நிரம்பல் தொகை(அலகு) |
|---|---|---|
| 05.00 | 1350 | 550 |
| 25.00 | 750 | 1550 |

1. இப்பண்டத்தின் கேள்வி நிரம்பல் சமன்பாடுகளைப்பெற்று சமநிலை விலையினையும் சமநிலைத் தொகையையும் மதிப்பிடுக. *(06 புள்ளிகள்)*

2. இப்பண்டத்திற்கு அரசாங்கம் ரூபா 20.00ஐ இழிவு விலையாக நிர்ணயிக்குமாயின் மிகை நிரம்பலின் அளவை மதிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

3. மிகை நிரம்பல் முழுவதையும் அரசு கொள்வனவு செய்யுமாயின் அரசின் கொள்வனவுச் செலவினையும் விற்பனையாளனின் மொத்த வருமானத்தினையும் காண்க. *(04 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. மேற்காட்டிய தரவுகளின் அடிப்படையில் இப்பண்டத்திற்கான கேள்வி, நிரம்பல் மாதிரி வரைபுகளை வரைக. *(02 புள்ளிகள்)*

5. அரசு மிகை நிரம்பலை கொள்வனவு செய்யும் போது ஏற்படும் தேறிய சமூகநலன் இழப்பினையும் இழிவு விலை நிர்ணயிக்கும்போது ஏற்படும் தேறிய சமூக நலனிழப்பினையும் மதிப்பிடுக. *(05 புள்ளிகள்)*

***05)***

1. பின்வரும் ஒவ்வொன்றையும் நிலையான செலவுகள் மாறும் செலவுகள் என வகைப்படுத்துக.
   i. மூலப்பொருள் கொள்வனவுச் செலவு
   ii. நிரந்தரத் தொழிலாளரின் அடிப்படை சம்பளம்
   iii. எரிபொருள் செலவு
   iv. வங்கிக்கடனுக்கான வட்டி *(04 புள்ளிகள்)*

2. அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு விதி என்றால் என்ன? அதிகரிக்கும் அளவுத்திட்ட விளைவு விதி தோன்றுவதற்கான காரணிகள் யாவை? *(04 புள்ளிகள்)*

3. குறுங்கால உற்பத்தித் தொழிற்பாடு மற்றும் நீண்டகால உற்பத்தித் தொழிற்பாடு என்பவற்றை வேறுபடுத்ததுக. *(04 புள்ளிகள்)*

4. அமையச் செலவிற்குள் உள்ளடங்கும் செலவுகள் இரண்டும் எவை? அவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வோர் உதாரணம் தருக. *(04 புள்ளிகள்)*

5. குறுங்காலத்தில் உற்பத்தி நிறுவனம் ஒன்றின் பல்வேறு வெளியீட்டு மட்டங்களில் உள்ள மொத்தச் செலவுகள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| வெளியீட்டு மட்டம் | 0 | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
|---|---|---|---|---|---|---|---|---|
| மொத்தச் செலவு | 100 | 120 | 130 | 138 | 160 | 190 | 238 | 296 |

இத்தகவல்களின் படி 5 அலகுகள் வெளியீட்டை உற்பத்தி செய்யும் போது சராசரி மாறும் செலவினையும் (AVC) சராசரி நிலையான செலவினையும் (AFC) மதிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

***06)***


1. சிலர் உரிமைச்சந்தையின் பண்புகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

2. யாதாயினும் நான்கு பண்புகளின் அடிப்படையில் நிறை போட்டிச் சந்தையையும் தனியுரிமைச் சந்தையையும் வேறுபடுத்துக. *(04 புள்ளிகள்)*

3. நிறை போடடிச் சந்தையில் உள்ள வழங்குனர் ஒருவர் விலை எடுப்பவர் என வரையறுக்கப்படுவது ஏன் என விளக்குக. *(04 புள்ளிகள்)*

(All Rights Reserved/ முழுப்பதிப்புரிமை உடையது)

4. பின்வரும் வரைபடம் குறுங்காலத்தில் சந்தை ஒன்றில் உள்ள நிறுவனம் ஒன்றின் கேள்வி மற்றும் செலவு வளையிகளைக் காட்டுகிறது.




i. இந்நிறுவனத்தின் மொத்த நிலையான செலவினை கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

ii. ரூபா 80.00 விலையில் பொருளியல் இலாபத்தினை கணிப்பிடுக. (02 புள்ளிகள்)

iii. இந்நிறுவனத்தின் பூச்சிய சிக்கன இலாப விலை யாது? (02 புள்ளிகள்)

iv. இந்நிறுவனத்தின் தொழில் நிறுத்தல் புள்ளியிலுள்ள விலை யாது? (02 புள்ளிகள்)